[29th August 1970

இயக்குனர்களும், கல்வி ஆலோசகர்களும் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த நான்கைந்து குழுக்களில் தேர்வு பற்றி ஆராய்வதற்காக ஒரு குழுவும் இருக்கிறது. அந்தக் குழுவினர் தக்கபடி ஆராய்ந்து திட்டம் தருவார்களானால், நடைமுறைக்கு அவற்றைக் கொண்டுவரலாம். அதிலும் கூட சங்கடம் இருக்கிறது.

செல்வாக்குப்பெற்ற எல்லோரும் சேர விரும்புகிற சில கல்லூரிகளுக்குத்தான் எல்லோரும் சென்று சேர விரும்புகிறார்கள். அந்தந்தக் கல்லூரிகளில் படித்தவர்களை முதலில் சேர்த்துக்கொண்டு பிற கல்லூரி மாணவர்களைப் பிறகுதான் எடுத்துக்கொள்ளும் சூழ்நிலையிருப்பதால் அதில் சங்கடம் வருகிறது. போஸ்ட் கிராஜுவேட் கோர்ஸ் இருக்கிற கல்லூரிகளில் அந்தக் கல்லூரியில் படித்தவர்களை மட்டும் எடுக்கும் நிலை வரும். பிரசிடென்சி, பச்சையப்பா, லயோலா, கிருஸ்தவக் கல்லூரி போன்றவைகளில் அப்படி முடிவு செய்தால், போஸ்ட் கிராஜுவேட் இல்லாத பள்ளிகளிலிருந்து படித்த மாணவர்கள் வரும்போது யாரையும் அந்தக் கல்லூரிகளில் எடுக்க முடியாத நிலை ஏற்படும். இதையெல்லாம் முறைப்படுத்தத்தான் சில முறைகளைக் கையாண்டு வருகிறோம். பல்கலைக் கழகம் அதை ஆராய்ந்து வருகிறது. தேர்வு முறையில் எக்சாமிநேஷன், அசெஸ்மெண்ட் என்று 50 மார்க்கும், ஃபைனல் எக்சாமிநேஷனுக்கு 50 மார்க்கும் கொடுக்கலாம் என்றிருக்கிறது. இதில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பிடிக்காமல் போய் விட்டால், அவர் வேண்டுமென்றே குறைத்து மார்க் போட்டு வேறு வகுப்பிற்குச் செல்லாமல் செய்துவிட்டார் என்ற குறையும் சொல்லப்படும். ஆகையால் கல்வி ஆலோசனைக் குழுவில், கன்ஸல்டேடிவ் கமிட்டியிலே இதை எடுத்து ஆராய்கிறார்கள். தக்க முடிவு வரும்போது அதைக் கையாள யோசிக்கலாம்.

Anti-God and Anti-Religious posters

*41. *Q.*—THIRU A.R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether it is a fact that Anti-God and Anti-Religious posters were displayed in many parts of Coimbatore City during April 1970 condemning theists as fools and barbarians ; and

(*b*) whether there is any proposal to avert display of such posters?

கடவுள்—சமய எதிர்ப்புச் சுவரொட்டிகள்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) கோயம்புத்தூர் மாநகரில் சில பகுதிகளில் ஆத்திகர்களை முட்டாள்கள் என்றும் காட்டு மிராண்டிகள் என்றும் கண்டித்து கடவுள் சமய எதிர்ப்புச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டனவா ?

(இ) அத்தகைய சுவரொட்டிகள் ஒட்டி வைப்பதைத் தடுக்கும் எண்ணம் உண்டா ?

29th August 1970]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம் ஆனால், கோவை அவனுசி சாலையில் மட்டும்தான் அது போன்ற சுவரொட்டிகள் காணப் பட்டன.

(இ) இது போன்ற வழக்குகளில், சம்பந்தப்பட்டவர்கள் மீது இந்திய குற்றவியல் தண்டனை விதித் தொகுப்பின்படி நடவடிக்கை எடுக்கலாம். வேறு எந்த செயற்குறிப்பும் அரசாங்கத்தின் பரிசீலனை யில் இல்லை.

திரு. எம். எத்திராஜுலு : இந்த சுவரொட்டி ஒட்டியவர்களை அர சாங்கம் கண்டுபிடித்து ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்த சுவரொட்டியில் அதை அச்சடித்த அச்சகத்தினுடைய பெயர் இல்லாமையால், குற்றவாளி களைக் கண்டுபிடிக்க இயலவில்லை.

Newly created Departments in the Secretariat

*42. *Q.*—THIRU M. ETHIRAJALU : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) the Departments which were newly created in the Secretariat after the D.M.K. assumed office ; and

(*b*) the annual expenditure involved thereby ?

தலைமைச் செயலக புதிய துறைகள்

திரு. எம். எத்திராஜுலு : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தி.மு.க. அரசு பதவி ஏற்ற பின் தலைமைச் செயலகத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட துறைகள் யாவை ?

(இ) இதனால் ஆண்டொன்றுக்கு ஏற்படும் செலவு யாது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :

(அ) கல்வித் துறை
பொதுச் சுகாதாரத் துறை (தற்போது சுகாதாரம் குடும்ப நலத் துறையாக உள்ளது)
சமூக நலத் துறை
தொழில் துறை
தொழிலாளர் துறை
கூட்டுறவுத் துறை

(இ) ஆண்டுச் செலவு ரூ. 2,34,580–70 ஆகுமென்று மதிப்பிடப் பட்டுள்ளது. (இரண்டு லட்சத்து முப்பத்தி நாலாயிரத்து ஐநூற்றுத் எண்பது ரூபாய், எழுபது காசு மட்டும்).